பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182

தினப்புயல்
PTN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of. N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்

புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 56

# பற்றியெறிந்த தென்னிலங்கை - பல அரசியல்வாதிகளின் வீடுகளுக்கு தீ வைப்பு - நாளை காலை 07 மணி வரை ஊரடங்கு சட்டம் அமுல் - மஹிந்த இராஜினாமா




நேற்றைய தினம் அலரிமாளிகைக்கு முன்பாக ஏற்பட்ட அமைதியின்மை பின்னர் கலவரமாக மாற்றம் பெற்றதுடன். ஏற்கனவே அரசுக்கு எதிராக காலி முகத்திடலில் மக்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் மைனா கோ கம என்கிற இடத்திற்குச் சென்ற குறித்த மஹிந்தவின் ஆதரவாளர்கள் அடித்து நொருக்கிய சம்பவமும் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து கலவரம் பாரியளவில் வெடித்தது. ஏராளமானவர்கள் மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாக பேரூந்துகளில் அழைத்துவரப்பட்டிருந்தனர். இரவோடிரவாக பல பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டதுடன். மரணமும் பதிவாகியிருப்பதுடன் பலர் காயமடைந்திருக்கின்றனர். வாகனங்களுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் வீட்டிற்கும் தீ வைக்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்க. எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசா விஜயம் மேற்கொண்டிருந்தபோது. எதிர்க்கட்சித் தலைவர் தாக்கப்பட்டமை பதிவாகியிருக்கிறது.

நேற்றையதினம் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியியை இராஜினாமா செய்யவுள்ளதாக வெளியான தகவலையடுத்து அவருக்கு ஆதரவான கும்பல் ஒன்றினால் திட்டமிட்டு இவ்வாறானதொரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவே தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. விசாரணைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரைவிடுத்துள்ளார். ஜனநாயக ரீதியில் நாட்டில் போராட்டங்களை முன்னெடுத்துவந்த மக்களைக் குழப்புகின்ற நடவடிக்கையாக நேற்றைய கலவரச் சம்பவம் பதிவாகியிருக்கிறது. சர்வதேச ரீதியாக கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, நாட்டில் பிறப்பிக்கப்பட்டிருந்த ஊரடங்கு உத்தரவு எதிர்வரும் 11 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடக பிரிவு குறிப்பிட்டுள்ளது. முன்னதாக நேற்று மாலை 7 மணி முதல் இன்று (10) காலை 07 மணி வரையில் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டிருந்த நிலையில். நாளை மறுநாள் காலை 07 மணி வரை ஊரடங்கு உத்தரவு இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளது. அதிகாரமளிக்கக்கூடிய அதிகாரியினால் வழங்கப்படும் எழுத்து மூல அனுமதி பத்திரத்தை தவிர பொது வீதிகளில். ரயில் வீதிகளில், பூங்காக்களில், பொது மைதானங்களில் மற்றும் பொது இடத்தில் அல்லது கடற்கரையில் தங்கியிருக்க அனுமதியில்லை என ஜனாதிபதி ஊடக பிரிவு அறிவித்துள்ளது.

அதேநேரம். மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து ராஜினாமா செய்ததாக குறிப்பிட்டு வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நேற்று மதியம் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையில் இருந்து வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் தற்போது காலி முகத்திடல் போராட்டம் கட்டுப்பாட்டுக்குள் வந்திருக்கிறது.

## பல தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தத்தில்...

இலங்கை நிர்வாக சேவைகள் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களும் இன்று (10) முதல் மறு அறிவித்தல் வரை அனைத்து கடமைகளிலிருந்தும் விலக தீர்மானித்துள்ளனர். வன்முறையை ஆதரித்த அரசாங்கத்தின் மீது அதிருப்தியை வெளிப்படுத்த தொழிற்சங்கங்கள் நடவடிக்கை எடுத்து வருவதாக நிர்வாக சேவைகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தருணத்தில் நாடு அராஜகமாகி விடுவதைத் தடுக்க உடனடியாக பாராளுமன்றத்தை கூட்டுமாறு சபாநாயகரிடம் இலங்கை நிர்வாக சேவைகள் சங்கம் கோரிக்கை விடுக்கின்றது. இதேவேளை, புகையிரத நிலைய அதிபர்கள் சங்கமும் நேற்று நள்ளிரவு முதல் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. நாட்டில் தற்போது நிலவும் ஸ்திரமற்ற தன்மையை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரியே இந்த தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக புகையிரத நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இதேவேளை, இன்று முதல் முழு சுகாதார சேவையும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையம் தெரிவித்துள்ளது. சுகாதார சேவையின் அத்தியாவசிய சேவைகளை மாத்திரம் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அதன் தேசிய அமைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார். ஆசிரியர் அதிபர் சங்கங்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



# நீண்ட கால அரசியல்வாதி மகிந்தவின் வீழ்ச்சி

கோட்டா கோ கம மற்றும் மைனா கோ கம தாக்குதல் வியூகம் அலரி மாளிகையில் இருந்தே திட்டமிடப்பட்டது. மகிந்த பிரதமர் பதவியை விட்டு அகலப் போவதாக இடையிடையே அறிக்கைவிட்டாலும், அவர் குடும்ப நிர்ப்பந்தம் காரணமாக அப்பதவியை விட்டு அகல முடியாமல் இருந்துள்ளார். அவர் விரும்பினாலும், குடும்பத்தவர் தடையாக இருந்துள்ளனர். அவர் நாட்டுக்கு வீரர் போல பந்தா காட்டினாலும், மனைவி, பிள்ளைகளுக்கு அடிமையாகவே இருந்துள்ளார். அவர்களிடம் இருந்த கேள்வி கோட்டாவைத்தானே மக்கள் போகச் சொல்கிறார்கள். ஏன் மகிந்த பதவியை விட்டு போக வேண்டும் என்பதாகும். அதையே அவரது ஆதரவாளர்களும் கேட்டு வந்தனர்.

இந்நிலையில்தான் யோசித்த தமது கட்சி ஆதரவாளர்களை அழைத்து முடிவு செய்ய, ஒவ்வொரு பகுதியில் உள்ள ஆதரவாளர்களை கொழும்புக்கு அழைக்கிறார்கள். இதேசாட்டில் அவர்களைவைத்து ஆர்ப்பாட்டக்காரர்களை தாக்கும் திட்டமும் உள்நோக்கமாக இருக்கிறது. அதை அங்கு வந்த எத்தனை பேருக்கு தெரியுமோ தெரியாது. ஆதரவாளர்களை சந்திக்கும் மகிந்த நான் பதவியில் இருப்பதா? போவதா? என கேள்வி கேட்கிறார். அவரது கேள்விக்கு என்ன சொல்வார்கள்? நீங்கள் ஏன் போக வேண்டும் என அனைவரிமிருந்தும் பதில் வருகிறது. நான் அப்படியானால் உங்கள் விருப்படி போக மாட்டேன் என்கிறார்.

அதன்பின் நடந்தவை எல்லோருக்கும் தெரியும். அதே மப்புடன் போய் ஆர்ப்பாட்ட பூமியை நாசமாக்கி, தாக்குதலும் நடத்துகிறார்கள். அரச தரப்பின் பாதுகாப்பு படைகளிடமிருந்து எந்த நேரமும் தாக்குதல் ஒன்று வரலாம் என ஆர்ப்பாட்டக்காரர்கள் அலட்டாகவே இருந்தனர். காலம் இழுபறியானது. பாராளுமன்றத்தின் அருகே நடந்த போராட்டமும், அங்கு பலமான தாக்குதல் ஒன்றை நடத்த பாதுகாப்பு தரப்பு தயாராகிறது என உணர்ந்ததும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சமயோசிதாமாக பின் வாங்கினர். ஆர்ப்பாட்ட பூமியிலும் சனம் குறைந்தது. இதைப்பார்த்து சிலர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அச்சமடைந்து தளர்ந்துவிட்டனர் என பலர் கருதினர்.

அங்கிருந்த பலர் தங்கள் பிரதேசங்களுக்கு சென்று, அங்கு சில அண்டகிரவுண்ட் பணிகளில் ஈடுபடத் தொடங்கினார்கள். அதாவது ஆர்ப்பாட்ட பூமியில் தாக்குதல் நடந்தால், அதற்கான பதில் தாக்குதலை தமது பிரதேசத்தில் உள்ளவர்களுக்கு கொடுத்து உணர வைப்பது என்பதாகும்.

அப்படியான மக்களை அணி திரட்டும் திட்டம் செயல்படும் போது, படையினருக்கு பதிலாக மகிந்தவின் ஆதரவாளர்களே இறங்கி ஆர்ப்பாட்ட பூமியில் தாக்குதல் நடத்த இருப்பது நேற்று முன்தினம் இரவே பாதுகாப்பு தரப்பில் உள்ள நல்லுள்ளங்கள் மூலம் கசிந்தது. அது குறித்த அனைத்து விபரங்களும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு பகிரப்பட்டன. மொட்டு ஆதரவாளர்கள் போல, ஆர்ப்பாட்டக்காரர்கள் புத்தி குறைந்தவர்கள் இல்லை. டெக்னிக்கலாக எதையும் கையாளக் கூடிய மாணவர்கள்.

அவர்கள் கொழும்பு வரும் ஆதரவாளர்களது விபரக் கோர்வை, வழி மற்றும் வாகன இலக்கங்களை பெற்றுக்கொண்டனர். அவை தமது தரப்புக்குள் பகிரப்பட்டன. அதனடிப்படையிலேயே தாக்குதல் நடத்திவிட்டு திரும்பிய அனைவரும் நடு வழியில் தாக்குதலுக்கு உள்ளானார்கள். அதே சமயம் முக்கியமான நபர்களது சொத்துகளுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டது. அது எதுவரை தொடரும் அல்லது எப்போது முடியும் என்பது குறித்து எதிர்வு கூற முடியாது.

ஆர்ப்பாட்ட பூமியை தாக்கும் போது . அங்கே பெரும் கூட்டம் இருக்கவில்லை. தாக்க வந்தோரே அதிகமாக இருந்தனர். தாக்குதல் ஆரம்பித்ததும் சுற்றிலும் பணிமனைகளில் வேலை செய்துகொண்டிருந்த மக்களும், பொது மக்களும் ஆர்ப்பாட்ட பூமியை நோக்கி படையெடுத்தனர். அவர்கள் வரும்வரை நடத்திய நாசகார செயலோடு மகிந்த ஆதரவு தாக்குதல் காடையர் பின் வாங்கினர்.

அது அப்போது அவர்களுக்கு மட்டுமல்ல, மகிந்த தரப்புக்கும் வெற்றியாகவே தோன்றியிருக்கலாம். ஆனால் அதற்கு பின்னரே கேம் ஆரம்பித்தது. வாகன இலக்கங்களை வைத்து அடையாளப்படுத்தப்பட்ட வாகனங்களில் வந்தோரும் , வாகனங்களும் பொது மக்களால் தாக்குதலுக்கு உள்ளானது. அது போதாதற்கு அவரவர் ஊர்களில், அவர்களது வீடுகளுக்கும், சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டது. இதுவரை 4 உயிர்கள் பலியானதாகவும் தெரிகிறது. இந்த தாக்குதலை ராசபக்ச தரப்பு எதிர்பார்த்து இருக்கவில்லை. இது பொல்லுக் கொடுத்து அடி வாங்கிய கதைதான்.

கதை கந்தலாகிவிட்டதோடு, மகிந்தவின் மகன் யோசித்த, மனைவியோடு நாட்டை விட்டு வெளியேறிவிட்டார். இன்னும் சிலர் நாட்டை விட்டு வெளியேற தயாராக உள்ளனர். அவர்களை போகவிடாது தடுக்க ஆர்ப்பாட்டக்காரர்கள் முயல்வதாக தெரிகிறது. இவ்வளவு பிரச்சனையும் உக்கரமடைந்த பின்தான் மகிந்த தனது பிரதமர் பதவியை துறக்கவே முடிவு செய்தார். அதுவரை அவர் நடத்தியவை நாடகம். பிரதமர் விலகினால் அரசு கலைந்ததாக அர்த்தம். அடுத்து என்ன என பார்க்கலாம்?

இவ்வளவு சீக்கிரம் இவை நடக்குமென யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். அடுத்து கோட்டா பதவி விலக வேண்டும். அதுவும் அதிக காலம் எடுக்காது போல உள்ளது. இப்போது படையினரும், போலீசாரும் சாக்குக்கு கடமையில் இருக்கிறார்களே ஒழிய அதிகமானோர் ஆர்ப்பாட்டத்தை ஆதரிக்கிறவர்கள் என்பதே யதார்த்தம். குறிப்பிட்ட மகிந்தவாதிகள் மட்டுமே ஆர்ப்பாட்டத்தை எதிர்க்கிறார்கள். அவர்களே ஆர்ப்பாட்டத்தை நசுக்க முயல்கிறார்கள்.

சத்தமில்லாமல் மகிந்த பதவி விலகியிருந்தால் இவ்வளவு வெறுப்பை சந்தித்திருக்க தேவையில்லை. அவர்கள் தப்பி விடுவார்கள். அவர்களது ஆதரவாளர்களே மிக கடினமான ஒரு நிலைக்கு தள்ளப்படப் போகிறார்கள். இதையாவது பாடமாக எடுத்து கோட்டா விரைவாக பதவி விலகுவதே புத்திசாலித்தனம். நன்றி - ஜீவன் பிரசாத்

# தமிழ் இளைஞர்கள் அமைதி காக்கவேண்டும்

இத்தனை நிலைக்கு காரணமான ஜனாதிபதியே முதலில் பதவி விலகியிருக்க வேண்டும் எனவும் சமகால நிலை தொடர்பில் தமிழ் இளைஞர்கள் அமைதி காக்கவேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழரசு கட்சி அலுவலகத்தில் சமகால நிலை தொடர்பில் அவரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது நாடு அலங்கோலமான மிக மோசமான நிலையை எட்டியிருக்கின்றது. வன்முறை உச்சத்தை தொட்டிருக்கின்றது. ராஜபக்சக்களின் குண்டர்கள் நியாயமான போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் இடங்களிற்குள் புகுந்து அவர்களை தாக்கியிருக்கின்றார்கள். அதனால் கோபம் கொண்ட எமது மக்கள் மாவட்டங்கள் தோறும் வன்முறைகளை கையில் எடுத்திருக்கின்றார்கள். சட்டம் ஒழுங்கு நிலைகுலைந்திருக்கின்றது. இந்த நாடு மிக மோசமான நிலைக்குள் தள்ளிச்சென்றுள்ள நிலையில் வடக்கு கிழக்கு மாத்திரமல்ல மலையகம் உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள மக்களிடம் நான் ஒரு அன்பான வேண்டுகோளை விடுக்கின்றேன். நாங்கள் இந்த இடைக்காலத்தில் நிதானமாகவும், பொறுமையாகவும் எங்களது நிலைகளை தக்கவைத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக காலி முகத்திடலில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை தமிழ் இளைஞர்கள் கடைப்பிடித்த அமைதியும் நிதானமும் எங்களுக்கு ஒரு பெரு வெற்றியைத் தந்திருக்கின்றது.

தொடர்ந்து அந்த வெற்றியை தக்கவைக்க வேண்டுமானால், இன்னும் சிறிது நாட்கள் நாங்கள் மிகவும் நிதானமாக நடக்க வேண்டும். ஏற்கனவே பல கொலைகளையும் அராஜகங்களையும் சந்தித்த நாங்கள், தற்பொழுது அரசு இருக்கும் நிலையில் தமிழ் இளைஞர்கள் துப்பாக்கி வைத்திருந்தார்கள் அல்லது போராடினார்கள் என்பதை காண்பித்து அவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளக்கூடிய சூழல் உள்ளது.

இந்த நிலையில் இளைஞர்கள் நிதானமாக செயற்பட வேண்டும் என்று வினயமாக கேட்டுக்கொள்கின்றேன். அதிலும் குறிப்பாக, இலங்கையில் நடப்பது வன்முறைக்கு பதில் வன்முறையாக இருக்கக்கூடாது. அதற்கு பதிலாக அரசாங்கத்தை ஜனநாயக வழியிலே வீட்டுக்கனுப்ப முயற்சித்தவர்கள் வன்முறையை கையில் எடுத்திருப்பதானது மிக மோசமானது. இவ்வாறான நிலையில் எங்களையும் வலிய இழுத்து செல்லக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக உண்டு. ஆகவே, வடக்கு கிழக்கு மலையகத்தில் உள்ள இளைஞர்கள் மிக நிதானத்தோடு செயற்பட வேண்டும் என கரிசனையோடு கேட்டுக்கொள்கின்றேன்.

பிரதமர்மகிந்தராஜபக்சபதவியிலிருந்துவிலகியிருப்பதென்பது இந்தநாட்டிற்கு பெரிய விடயமாக நான் பார்க்கவில்லை. இந்த நாட்டினுடைய ஜனாதிபதி உடனடியாக பதவி விலகியிருக்க வேண்டும். அப்படி விலகியிருந்தால்தான் நாட்டில் இருக்கக்கூடிய நெருக்கடிக்கு தீர்வினை கொண்டு வந்திருக்க முடியும். ஆனாலும் அவர் பதவி விலகியிருப்பது ஏனைய அமைச்சர்களும் இயல்பாகவே பதவி விலகுவதற்கான சூழலாக இருக்கின்றது. இந்த நிலைமை இலங்கையின் தற்போதைய அரசியல் களச்சூழலில் ஒரு சிறிய ஆறுதலை தரும் என்று எதிர்பார்க்கின்றோம்.

குறிப்பாக கோட்டபாய ராஜபக்ச நாட்டை தவறாக வழிநடத்திய பொறுப்பை தானே ஏற்று பதவி விலகிச் செல்ல வேண்டியவர். அவர் அதனை செய்ய வேண்டும். செய்யவில்லை எனில் இன்னும் இந்த நாடு திருத்தத்திற்குள் வரவில்லை என்பதுதான் யதார்த்தமான உண்மையாகும் என அவர் தெரிவித்தார்.